DEPOSITION OF THE WITNESS

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண். CC.210/2023

**prosecution witness: LW-12 as PW-7**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முனியாண்டி | தொழில் | : | சார்பு ஆய்வாளர் இராமநாதபுரம் பி1 நகர் காவல் நிலையம் |
| த/பெ. | : | ராமு | வயது | : | 58 |
| கிராமம் | : | இராமநாதபுரம் | சமயம் | : | இந்து |

(Solemnly Affimed in Accordance with provision of oath's act 1969)

**<u>24.09.2025</u>**

( எதிரி ஆஜர் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை)

**<u>முதல் விசாரணை:-</u>**

நான் தற்போது இராமநாதபுரம் பி1 நகர் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளர் ஆக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 02.10.2022 ம் தேதி 10.15 மணியளவில் பாம்பன் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் ஆக பொறுப்பு நிலைய அலுவலில் இருந்தபோது சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் அஞ்சல், மேட்டுப்பட்டியை சேர்ந்த முத்து மகன் தமிழ்செல்வன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரைப் பெற்று பாம்பன் காவல் நிலைய குற்ற எண் 174/2022 சட்டப்பிரிவுகள் 279, 337, 304(A) இதசவின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து அதன் அசலை புகாருடன் இணைத்து கணம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். (**முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). மற்றொரு நகலை புலன்விசாரணைக்காக ஆய்வாளர் திருமதி.ஜீவரெத்தினம் அவர்களிடம் ஒப்படைத்தேன். இது சம்பந்தமாக என்னை ஆய்வாளர் விசாரித்தார்.

**<u>எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை</u>**

புகார்தாரரிடம் நடந்த சம்பவம் பற்றி விசாரித்தேனா என்றால் விசாரித்தேன். சம்பவம் நடைபெற்ற நடைபெற்ற நேரத்தில் புகார்தாரரின் சொந்த ஊரான காளையார்கோவில் என்ற இடத்தில் இருந்தார் என்றால் சரிதான். புகார்தாரருடன் யார் காவல் நிலையத்திற்கு வந்தார்கள் என்றால் சொந்தக்காரர்கள் அனைவரும் வந்தார்கள் பெயர் நினைவில்லை. புகார்தாரர் எத்தனைமணிக்கு தகவல் கிடைத்தது என்று சொன்னாரா என்றால் இல்லை. புகார்தாரர் யாரிடம் இருந்து தகவல் வந்ததாக சொன்னார் என்றால் குறிப்பிட்டு எதும் சொல்லவில்லை. புகார்தாரர் காளையார்கோவிலிருந்து நேரடியாக வந்து என்னிடம் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். புகார் மனுவை எழுதியது யார் என்றால் புகார்தாரர்தான் எழுதினார். நான்

சொல்வது போல் சொன்ன நேரத்தில் என்னிடம் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. புகார்தாரர் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கும்போது எதிரி காவல் நிலையத்தில் இருந்தாரா என்றால் இருந்தார்.

SUJITH Digitally signed by SUJITH Date: 2025.09.24 09:11:18 +0530